**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா.10** **Date : 13.05.2024**

| | |
|---|---|
| **Name : சசிகலா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பஜார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் நான் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 01.08.2020 ம் தேதி மதியம் 01.30 மணிக்கு கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் அழகுதுரை என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மாணிக்கம் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப குற்ற எண்.422/2020 ச.பி. 457, 380 இ.த.ச வின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது. பிறகு 01.08.2020 ம் தேதி மதியம் 02.30 மணிக்கு சம்பவயிடமான ராமன்நகர், சக்திநகர் வாதி மாணிக்கம் என்பவருடைய வீட்டில் சாட்சிகள் ராஜேஸ்குமார், கோபால் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.8** ஆகும். வரைபடம் **அ.த.சா.ஆ.9** ஆகும்.

2. நான் தயார் செய்த மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ.8 மற்றும் 9 ஆகும். பிறகு சாட்சிகள் மாணிக்கம். சுசீலா, பிரபு, குணசீலன், ராஜேஸ்குமார், கோபால், கலையரசன், சாந்திமேரி,சுந்தரம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். கடந்த 30.12.2020 ம் தேதி இரண்டாம் எதிரி

கிருஷ்ணமூர்த்தி என்பவர் பூலாம்பட்டி குற்ற எண். 388/2020 ச.பி. 379, 511 இ.தச. என்ற வழக்கில்பூலாம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் லாவண்யா அவர்களால் கைதுசெய்யப்பட்டு விசாரித்தபோது தானும், தனது நண்பர் பிரகாஷ் மற்றும் அரவிந்த் ஆகியோருடன் கருமலைக்கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேற்சொன்ன குற்ற எண் தொடர்புடைய வழக்கை பொறுத்து குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அவ்வாறு கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் கைதுசெய்யப்பட்டு பூலாம்பட்டி காவல் துறையினர் கைதுசெய்து நீதிமன்ற காவலில் ஒப்படைத்தார்கள். புலனாய்வு மேற்கொண்டு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் சம்பரதாய கைது இந்த வழக்கில் செய்து பின்னர் PT வாரண்ட் மூலமாக கொண்டுவந்து இந்த வழக்கில் காவலுக்கு உட்படுத்தினேன்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலம் இந்த வழக்கு தொடர்புடையதில் எதிரி கிருஷ்ணமூர்த்தி என்கிற குருவி என்பவரை காவல் நிலைய பொறுப்பில் வைத்து விசாரிக்கும் பொருட்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவுப்படி கடந்த 21.01.2021 ம் தேதியன்று காவலில் எடுத்து விசாரித்தேன். அவ்வாறு விசாரணையின்போது எதிரி கடந்த 21.01.2021 ம் தேதி மாலை 05.00 மணிக்கு கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது சாட்சிகள் கலையரசன், சாந்திமேரி ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்சொன்ன குற்ற வழக்கை ஒப்புக்கொண்டதன் பேரில் மற்ற இரண்டு எதிரிகளுடன் குற்ற சம்பவத்தின் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார். பிறகு எதிரி கிருஷ்ணமூர்த்தி கொடுத்த தகவலின் பேரில் கடந்த 21.01.2021 ம் தேதி மாலை 06.30 மணிக்கு கிருஷ்ணமூர்த்தி அவருடைய வீட்டிற்கு சென்றபோது எதிரி வீட்டிற்கு பின்னால் மறைத்து வைத்திருந்த 1. 90.9 கிராம் எடையுள்ள தங்க கட்டி( உருக்கிய நிலையில் உள்ளது) கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகள்

கலையரசன்,

4. சாந்திமேரி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ..10** கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.11** ஆகும். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 **அ.த.சா.ஆ.12** ஆகும். போலீஸ் காவல் முடித்தபிறகு எதிரி கிருஷ்ணமூர்த்தியை திரும்ப நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். கடந்த 12.02.2021 ம் தேதி மாலை 02.00 மணிக்கு எதிரி அரவிந்த என்பவர் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் ஆஜரானவரை விசாரிக்க குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

5. கடந்த 17.02.2021 ம் தேதி எதிரி பிரகாஷ் என்பவரை கருமலைக்கூடல் மாரியம்மன் கோவில் முன்பாக வைத்து கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கடந்த 12.02.2021 ம் தேதி எதிரி அரவிந்த் என்பவரை கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேகத்தின் பேரில் விசாரித்து குற்றத்தை ஒப்புக்கொண்டவரை முன்பாக வைத்து கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் பூலாம்பட்டி காவல் உதவி ஆய்வாளர் லாவண்யா மற்றும் காவல் உதவி ஆய்வாளர் அழகுதுரை ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

6. இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 19.02.2021–ம் தேதி குற்ற எண்.422/2020 ச.பி. 457, 380 இ.த.ச ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்..

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

7. வழக்கின் சம்பவம் சக்தி நகரிலுள்ள மாணிக்கம் என்பவருடைய வீட்டின்

கதவை உடைத்து திருடியதாக விசாரணைப்படி உள்ளது என்றால் ஆமாம். மாணிக்கம் வீட்டின் முன்பாக தார் ரோடும், அதனை தாண்டி சுரேஷ் மற்றும் கோபி என்பவருடைய காலியிடம் உள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மாணிக்கம் என்பவரிடம் வழக்குசொத்துக்குண்டான 12- 1/4 பவுண் தங்க ஆவணங்கள் குறித்து ரசீது மற்றும் அதன் அடையாளம் குறித்து விசாரித்து தெரிந்துக்கொண்டேன் என்றால் புகைப்படம் என்னிடம் காண்பித்தார்கள். ஆனால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. ரசீது என்னிடம் காண்பித்தார்களா என்றால் இல்லை.

8. பூலாம்பட்டி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் எதிரி கிருஷ்ணமூர்த்தியை இந்த வழக்கில் காவல் படுத்தினேன் என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலம் பூலாம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் பதியப்பட்டதில் அவருடைய வீட்டிற்கு பின்பாக ஒளித்து வைத்திருப்பதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளரா என்றால் இல்லை. காவல் விசாரணையில் தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் ஆமாம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் வழக்குசொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்றால் ஆமாம். கிராம நிர்வாக அலுவலர்களை எப்போது எங்கு நான் வரச்சொன்னேன் என்றால் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னேன். எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நினைவில்லை.

9. ஆனால் ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் நிலையத்தில் வைத்துத்தான் கையொப்பம் பெறப்பட்டது என்றால் ஆமாம். யார்யார் எந்தெந்த வாகனத்தில் எதிரி கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு சென்றோம் என்றால் என்னுடைய அரசு வாகனத்தில் சென்றேன். சாட்சிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள் அவர்களுடைய வாகனத்தில் வந்தார்கள். நான் சொன்ன அனைத்து செய்திகளும் எவ்வளவு மணிநேரத்தில் நடந்திருக்கும் என்றால் சுமாராக 3 மணிநேரம் நடந்திருக்கும். கைப்பற்றுதல் மகஜர் எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் கைப்பற்றிய பிறகு காவல் நிலையம் வந்து தயார் செய்தேன். எதிரி

பிரகாஷ் மற்றும் அரவிந்த் ஆகியோரிடம் தனிப்பட்ட முறையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான்.எதிரி கிருஷ்ணமூர்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் தான் இந்த வழக்கு முழுமையாக புலனாய்வு செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

10. உருக்கி வைக்கப்பட்ட தங்ககட்டி இந்த வழக்கில் சொல்லப்பட்ட திருப்பட்ட பொருளிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை என்னால் ஆவணரீதியாக சொல்லமுடியயுமா என்றால் முடியாது. ஆனால் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் சொல்லமுடியும். காவல் நியைலத்தில் கொடுக்கபட்ட ஒப்புதல் வாக்குமூலம் செல்லாது என்றால் சரியல்ல.

11. நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி கிருஷ்ணமூர்த்தியை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனடிப்படையில் அவருடைய வீட்டில் வைத்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும், எதிரி பூலாம்பட்டி காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதனடிப்படையில் இந்த குற்ற சம்பவங்கள் குறித்து தெரியவந்தது என்பது குறித்தும், சாட்சிகள் இருவரும்என்னால் தயார் செய்யப்பட்டது என்பது குறித்தும், நான் சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/–தே.மயில்சாமி,
குற்றவியல் நீதித்துறை எண்.2
மேட்டூர்.